# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

***2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 10 ஆந் திகதிய***

## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2023.11.10 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது)*

**நிதி குத்தகைக்கு விடுதல் (திருத்தம்)**

*2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க,*
*நிதி குத்தகைக்கு விடுதல் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்*

*நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்*
*அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.*

***விலை: ரூபா : 9.00*** ***தபாற்செலவு : ரூபா 50.00***

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சட்டப்பயன் பற்றிய கூற்று

***வாசகம் 2 :*** இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, நிதி குத்தகைக்கு விடுதல் சட்டத்தின் 24 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது குத்தகை எடுத்தவரின் சம்மதம் இன்றி ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட தாபனத்திற்கான குத்தகையின்கீழ் அவரது உரிமைகளை கைமாற்றுவதற்கு அல்லது குறித்தளிப்பதற்கு குத்தகை கொடுத்தவர் ஒருவரை இயலச்செய்கின்ற ஏற்பாடுகளை செய்வதற்குமாகும்.

***வாசகம் 3 :*** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் குத்தகை கொடுத்தவரின் உரிமைகள் குத்தகை எடுத்தவரின் வங்கிமுறிவிலான நம்பிக்கைப்பொறுப்பாளர் ஒருவருக்கு எதிராக அல்லது குத்தகை எடுத்தவரின் கடன்தருநர் ஒருவருக்கு எதிராக வலுவுறுத்தப்பட வேண்டியிருக்கின்றதாயின் 2023 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்தின்கீழ் குத்தகை கொடுத்தவரின் உரிமைகளை செல்லுபடியாகும் முறையில் பூர்த்தி செய்திருப்பதனை தேவைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்குமாகும்.

***வாசகம் 4 :*** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது சாதனத்தின் உடைமையை மீளப்பெறுவதற்கு 2023 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்தின்கீழ் ஏதேனும் நிதிக்குத்தகையின்கீழ் உரிமைகளைப் பதிவு செய்து - கொண்டுள்ளவரான குத்தகை கொடுத்தவர் ஒருவரின் உரிமையை ஏற்றங்கீகரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்குமாகும்.

*ச.வ.ஓ.66/2017*

**2000 ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க,
நிதி குத்தகைக்கு விடுதல்
சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** (1) இச்சட்டம் 2023ஆம் ஆண்டின் ....... ஆம் இலக்க, நிதி குத்தகைக்கு விடுதல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். — *சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்*

(2) இப்பிரிவின் ஏற்பாடுகள் தவிர்ந்த, இச்சட்டத்தின் ஏற்பாடுகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகள் பாராளுமன்றத்தில் எத்தேதியன்று சட்டமூலம் சட்டமாக வருகின்றதோ அத்தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2.** (இச்சட்டத்தில் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க, நிதி குத்தகைக்கு விடுதல் சட்டத்தின் 24ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், “குத்தகை கொடுத்தவர், நிதிக் குத்தகை செய்துகொள்ளப்படும் நேரத்தில் அல்லது அதன்பின்னர் பெறப்படும் குத்தகை எடுத்தவரின் எழுத்திலான சம்மதத்துடன், நிதிக் குத்தகையின்கீழ் அல்லது குத்தகையின்கீழ் வழங்கப்படும் ஏதேனும் உபகரணம் தொடர்பாக அல்லது இவை இரண்டினதும், குத்தகை கொடுத்தவருக்குள்ள உரிமைகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட தாபனத்துக்கு அல்லது விசேட நோக்க அமைப்புக்குக் கைமாற்றலாம் அல்லது சாட்டுதல் செய்யலாம்:’ என்னும் சொற்களுக்குப் பதிலாக, ’குத்தகை கொடுத்தவர், நிதிக் குத்தகையின்கீழ் அல்லது குத்தகையின்கீழ் வழங்கப்படும் ஏதேனும் உபகரணம் தொடர்பாக அல்லது இவை இரண்டினதும், குத்தகை கொடுத்தவருக்குள்ள உரிமைகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் — *2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்கச் சட்டத்தின் 24ஆம் பிரிவைத் திருத்துதல்,*

ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட தாபனத்துக்கு அல்லது விசேட நோக்க அமைப்புக்குக் கைமாற்றலாம் அல்லது சாட்டுதல் செய்யலாம்:” என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 26ஆம் பிரிவைத் திருத்துதல்*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், “எவரேனும் கடன்தருநருக்கு எதிராக வலுவுறுத்தப்படலாம்.” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “எவரேனும் கடன்தருநருக்கு எதிராக வலுவுறுத்தப்படலாம். ஆயின், குத்தகை கொடுத்த ஒருவர், 2023ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டத்தின்கீழ் அவ்வுரிமைகளைச் செல்லுபடியான முறையில் நிறைவுசெய்திருத்தல் வேண்டும்.” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 27ஆம் பிரிவைத் திருத்துதல்*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27ஆம் பிரிவு, “இச்சட்டத்தின் கீழ் அல்லது நிதிக்குத்தகையொன்றின் ஏற்பாடொன்றின்கீழ்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “2023ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டத்தின்கீழ் அல்லது போட்டியிடுகின்ற உரிமைக்கோரிக்கையாளர்கள் எவரும் இல்லாதவிடத்து, நிதிக்குத்தகையொன்றின் ஏற்பாடொன்றின்கீழ்” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.